தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**18 - 22 வயதுப்பிரிவு**
(01.01.2004 – 31.12.2008 வரையில் பிறந்தோர்)

## லெப்டினனட் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி

தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கிய முதலாவது மரபுவழிச் சிறப்புப்படையணி லெப்டினனட் சாள்ஸ் அன்ரனி படையணி. 1983 யூலை பதினைந்தாம் நாள் வீரச்சாவடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதல் தளபதியான லெப்டினனட் சீலன் அவர்களின் இயற்பெயரான சாள்ஸ் அன்ரனி என்ற பெயரை இப்படையணிக்குச் சூட்டினார் தமிழீழத் தேசியத்தலைவர்.

லெப்டினனட் சீலன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதுகெலும்பாகவும் தமிழீழத் தேசியத்தலைவரின் நம்பிக்கையை வென்ற போராளியாகவும் விளங்கிய திருகோணமலை மண் தந்த பெருவீரன். தமிழீழ விடுதலைப் போராட்டம் அடுத்தகட்ட நகர்வை எட்டுவதற்கு உறுதிதளராது தலைவனுக்குத் தோள்கொடுத்த தளபதி. தமிழீழ வரலாற்றுப் படிமங்கள் இவர் போன்ற வீரர்களால் பதியமிடப்பட்டுள்ளன. அதனாலேயே அத்தகைய வரலாற்று நாயகர்களின் பெயர்தாங்கி படையணிகள் உருவாக்கப்பட்டன.

1991 ஏப்ரல் பத்தாம் நாள் லெப்டினனட் சாள்ஸ் அன்ரனி படையணி பிறப்பெடுத்தது. சமர்க்கள நாயகனாம் பிரிகேடியர் பால்ராஜ் இதன் சிறப்புத் தளபதியாகத் தமிழீழத் தேசியத் தலைவரால் நியமிக்கப்பட்டார். இப்படையணியின் பிறப்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இமாலய வெற்றிகளுக்குப் புடம்போட்டது. விடுதலை வேட்கைகொண்ட தமிழ் இளையோரின் மனத்திடமும் வீரமும் இதன் அத்திவாரங்களாயின.

பயிற்சி, தந்திரம், துணிவு, வெற்றி என்ற கோட்பாட்டின் கீழ் உருவான லெப்டினனட் சாள்ஸ் அன்ரனி படையணி சிங்களப் படையின் ‘வன்னி விக்கிரம 2’ தாக்குதல் முறியடிப்புத் தொடங்கி பல முறியடிப்புச் சமர்களிலும் தவளைப்பாய்ச்சல், ஓயாத அலைகள் என்ற வழியில் முள்ளிவாய்க்கால் வரை தன் முத்திரை பதித்து நின்றது.

தாக்குதல் அணிகள், வேவு அணிகள், கனரக ஆயுத அணிகள் என தமிழீழ விடுதலைப் போரில் இதன் வகிபாகம் மிகப்பெரியது. சமர்க்களங்கள் மட்டுமன்றி நிர்வாகம், அரசியல், கலைபண்பாடு, விளையாட்டு என பல்துறை சார்ந்த ஆளுமை மிக்கவர்களாகப் போராளிகளை இப்படையணி வளர்த்தெடுத்தது. காலத்தால் அழிக்க முடியாத வெற்றிச் சமர்களைத் தனதாக்கியது.

“இயலாத ஒன்று இருக்காது எமக்கு” என்ற வீர முழக்கத்தோடு எதிரிப் படையை நிலைகுலைய வைத்த லெப்டினனட் சாள்ஸ் அன்ரனி படையணி, பின்னாள்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகள் பலவற்றுக்கு வழிகாட்டியாக நிமிர்ந்தது. சொல்லும் செயலும் ஒன்றெனக் கொண்ட வீரத்தளபதிகளும் போராளிகளும் இப்படையணியோடு இணைக்கப்பட்டனர். தம்மையும் தமிழீழ விடுதலைப் போரையும் உலகுக்கு அடையாளப்படுத்திய இவர்களின் வீரமும் தீரமும் வியத்தகு வெற்றிகளும் எமக்கான வழிகாட்டல்களாக நிறைந்துள்ளன.

உலகப்பரப்பிலே எவருக்கும் கிட்டாத தலைவனையும் அவர் காட்டியவழியிலே செம்மாந்து நின்ற படையணிகளையும் விடுதலைப்புலி வீரர்களையும் பெற்றவர்கள் நாங்கள். என் அன்புக்கினிய தோழர்களே! வரலாறு எமது வழிகாட்டி. நம்பிக்கையும் உறுதியும் தெளிவும் தடம்மாறாத பயணமும் எமது இலக்கை வென்றடையச் செய்யும். நாம் ஒன்றாகுவோம். வென்றாளுவோம்.

“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்”